திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிழல் தருகின்ற மரங்கள் நடப்படுகின்றது என்றால் அவை பெரிய மரங்களாகத்தான் இருக்கும். எனவே அந்த மரங்களின் சரகுகள் அந்த நதியிலே விழுந்து மேலும் துர்நாற்றம் உடைய கூவம் நதியாக ஆக வாய்ப்பு இருக்கின்றது. எனவே அங்கே சிறிய மரங்களை நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம், வீரப்பன்: தலைவரவர்களே, நிழல் தரும் மரங்கள் என்று சொல்லுகின்றபோது அவை எந்த அளவிற்கு பெரிய மரங்களாக வளரும் என்பது தெரிவிக்கப்படவில்லை. ஆனால், அப்படிப்பட்ட மரங்களின் சருகுகள் நீரிலே விழுந்து அழுகி துர்நாற்றம் ஏற்படுகின்ற வகையில் அமையாது மரம் நடுகின்ற திட்டமே துர்நாற்றத்தைப் போக்குவதற்காகத்தான் உருவாக்கப்படுகின்றது.

திரு. ஆர். வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் நதியிலே சுற்றுலாத்துறையின் மூலம் படகு விடுகின்ற திட்டம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மரம் நடுகின்ற திட்டத்தை பற்றி மட்டும்தான்.

புதுக்கோட்டைத் தொகுதியிலுள்ள வெள்ளாள விடுதி,
திராபிடுங்கி விவசாயப் பண்ணைகள்.

*வினா எண். 213 — திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான், திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டைத் தொகுதியில் உள்ள வெள்ளாள விடுதி. திராபிடுங்கி ஆகிய இடங்களில் உள்ள விவசாயப் பண்ணைகளை அரசு மூடிவிட உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு பண்ணைக் கழகத்தின் நடவடிக்கைகள் 31-8-1982 முதல் நிறுத்தப்பட்டுவிட்டதால், புதுக்கோட்டை தொகுதியிலுள்ள வெள்ளாள விடுதி பண்ணை எண்ணெய் வித்துக்கள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. திராபிடுங்கி பண்ணை வருவாய்த்துறைக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.